Criminal action against Thappugundu Village Munsif

*** 120 Q.**—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the number of times the Village Munsif of Thappugundu, Periakulam taluk, Madurai district, was suspended from service for having indulged in misappropriation of funds and issue of take receipts, pattas, etc. ;

(*b*) the reasons for not taking criminal proceedings against him through Court ;

(*c*) whether any complaint had been received against him at present ; and

(*d*) the action taken thereon ?

தப்புகுண்டு கிராம முன்சிப்மீது கிரிமினல் நடவடிக்கை.

திரு என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட பெரியகுளம் தாலூகா தப்புகுண்டு கிராம முன்சீப் கையாடல், பொய் ரசீது, பொய்ப் பட்டா முதலியன கொடுத்ததற்காக எத்தனே தடவை தற்காலிகமாக விலக்கி வைக்கப்பட்டார்?

(இ) கோர்ட் மூலம் கிரிமினல் நடவடிக்கை இதுவரை எடுக்காத காரணம் என்ன ?

(உ) தற்போது அவர்மீது புகார் வந்துள்ளதா ?

(எ) அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : : (அ) 1—12—1962 முதல் 31—7—1964 வரையும், 1—4—1967 முதல் தொடர்ச்சியாக இன்று வரையும் ஆக இரு முறைகள் பதவியிலிருந்து விலக்கிவைக்கப் பட்டுள்ளார்.

(இ) இந்தியத் தண்டனேச் சட்டக் கோவையின் (I.P.C.) 409-வது பிரிவின் கீழ் குற்றவியல் வழக்கு தொடர்வது, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது குறித்து அரசாங்க உதவி வழக்குரைஞரின் கருத்தினைப் பெரியகுளம் உதவி கலெக்டர் பெற்றுள்ளதால், இக்கேள்வி எழவில்லே.

(உ) ஆம்.

(எ) கையாடல் செய்யப்பட்ட தொகை கிராம மணியத்திடமிருந்து வசூலிக்கப்பட்டது. அவர் மீது வழக்கு தொடர்வது குறித்தும், துறை அளவில் நடவடிக்கை எடுப்பது குறித்தும், பெரியகுளம் உதவி கலெக்டர் ஆலோசித்து வருகிருர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலேவரவர்களே, 1962-ம் வருடத் தில் இந்த கிராம முன்சீப் ரசீது கொடுக்கும்போது, அதாவது விவசாயிகளுக்குக் கொடுக்கிற ரசீதில் 5 ரூபாய் என்ருல் அடி கட்டையில் 2 ரூபாய் என்று வைத்து ரசீதுகள் கொடுத்து ஏமாற்றி வந்ததைக் கண்டு பிடித்து 750 ரூபாய் வ்ரை இவ்வாறு செய்திருப்ப தாகக் கண்டு நடவடிக்கை எடுக்க ரகுபதி அவர்களிடம் கேட்டேன், ஆனுல் அவர்மீது நடவடிக்கை எடுக்கவில்லே. அதற்குப் பின்னுல் இதுமாதிரியான தவறுகள் நூற்றுக்கணக்கில் செய்திருக்கிருர் இவர். அதுபற்றி பலமுறை கலெக்டருக்கும், சப்-கலெக்டருக்கும், டிபார்ட்

மெண்டிற்கும் முன்பிருந்த ரெவின்யூ அமைச்சருக்கும் எழுதி யிருக்கிறேன். ஆனல் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் என்ன என்று புரியவில்லை. ஆகவே அவர்மீது இப்போதாவது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியகழன் : தலைவரவர்களே, அதைத் தான் ஏற்கனவே சொன்னேன். பெருமாள்சாமி என்பது இவர் பெயராகும். முதலில் அவர் 1—12—1962 முதல் 31—7—1964 வரையில் பல தவறுகளுக்காக நீக்கி வைக்கப்பட்டிருந்திருக்கிறர். மறுபடியும் 64-ல் சேர்க்கப்பட்டு இருக்கிறர். அது முந்திய அரசாங்கம் இருந்தபோது . பிறகும் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபிறகு 6—3—1967-லிருந்து 20 நாட்கள் தான் தாக்குபிடிக்க முடிந்து, பிறகு 1—4—1967 லிருந்து நீக்கப்பட்டார். முன்னுல் நடந்த கதைதான் இது. இந்த கிராமத்திற்கே தப்புகுண்டு என்று பெயராகும். (சிரிப்பு) ஜெங்கல் பட்டி என்ற மற்றொரு கிராமத்து மணியத்தையும் அவரிடம் ஒப்புவித்து, அங்கே 950 ரூபாய் தவறு செய்து இருக்கிறர். இந்தத் தவறு நடந்த நேரம் 1966 நவம்பர் முதல் அடுத்த ஜனவரி வரையில் ஆகும். இதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்தாலும், கிரிமினல் வழக்கு தொடரவிருக்கிறது. டிபார்ட்மெண்ட் வழக்கும் எடுக்கப்படும். இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் இந்த தவறுகள் நடந்தன என்று உறுப்பினரும், இந்த சபையும் கருதக்கூடாது.

MR. CHAIRMAN : Question 121 is postponed.

Inter-caste Marriages

* 122 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(*a*) the number of inter-caste marriages that took place in Tamil Nad after the introduction of the scheme of a ward of medals to the couples of inter-caste marriages ; and

(*b*) whether medals have been awarded to all such couples ?

கலப்பு மணங்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கலப்பு மணம் செய்து கொண்ட மணமக்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் உருவாக்கப்பட்ட பின் தமிழ் நாட்டில் எத்தனை கலப்பு மணங்கள் நடந்துள்ளன ?

(இ) அவ்வாறு மணம் புரிந்து கொண்ட எல்லா மணமக்களுக்கும் பரிசளிக்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : (அ) அரிசன நலத் துறை இயக்குநரிடம் உள்ள தகவல்களின்படி 7 கலப்பு மணங்கள் நடந்துள்ளன.

(இ) இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, கலப்பு மணம் செய்து கொண்ட மணமக்களுக்கு பரிசளிக்கும் திட்டம் வருவதற்கு முன்பு கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு பரிசு கொடுக்கப்படுமா ? அப்படியென்றல் எவ்வளவு கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, அதற்குரிய திட்டம் இன்னும் சரியான முறையில் தீட்டப்படவில்லை. அதைக் கனம் இயக்குனர் அவர்கள் மாவட்ட கலெக்டர்களோடு